ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1807/23 - 2013 අප්‍රියෙල් 26 වැනි සිකුරාදා - 2013.04.26
*1807/23 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை

2013 ஆம் ஆண்டின் 114 ஆம் இலக்கக் கட்டளை

எனது குறிப்பு இல. : 4-3/4/2013/டீ/96.
காணி எடுத்தல் உத்தியோகத்தரின் குறிப்பு இல. : எல்டீடீ/டீஓ(i)/எல்ஏ/பிஏஎல்/01.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல. 1200/6, ராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2013.04.24.

அட்டவணை

1. காணி எடுத்தல் உத்தியோகத்தர் : யாழ்ப்பாண மாவட்டம்.

2. காணியின் விபரம் : வட மாகாணத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தில், வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில், காங்கேசன்துறை மேற்கு, காங்கேசன்துறை மத்தி, வீமன்காமம் தெற்கு, தையிட்டி தெற்கு, பலாலி தெற்கு, ஒட்டாபுலம், வளலாய் ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. வைஏ/ரீஎல்எல்/2013/111 மற்றும் 2013.04.24 ஆந் திகதிய முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு இலக்கம் 1 தொடக்கம் 72 வரை காட்டப்பட்ட சுமார் 2.578.4475 ஹெக்டயார்ஸ் ( 6,371 ஏக்கர், 01 றூட், 15 பர்ச்சஸ்) முழு விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித் துண்டு :

வடக்கு : இந்து சமுத்திரம் ; கிழக்கு : மண்ணினால் அமைக்கப்பட்ட அணைகரை ; தெற்கு : மண்ணினால் அமைக்கப்பட்ட அணைகரை ; மேற்கு : இலங்கை துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான காணி, சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணி மற்றும் மண்ணினால் அமைக்கப்பட்ட அணைகரை.

05 -271

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.